

கரூர் சட்டமன்றத் தொகுதி கழக இளைஞர் அணி சார்பில், இந்தித் திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம், மக்களவை தொகுதிகள் சீரமைப்பில் அநீதி இழைத்திடும் ஒன்றிய அரசை கண்டித்து, மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம், கரூர் பசுபதி பாளையம் உதயநிதி திடலில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, எழுத்தாளர் சூர்யா சேவியர், தலைமை கழக இளம் பேச்சாளர் சண்முகவள்ளி சிறப்புரையாற்றினர். இந்த கண்டனப் பொதுக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் பொதுமக்கள் வெள்ளமென திரண்டு கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் ஈரோடு மாவட்ட வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுக்கு உண்டான ஆய்வுக் கூட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் எ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அர்பித் ஜெயின், கோபிச்செட்டிப்பாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டத்திற்கு முதல்வர் அவர்களின் வருகையை முன்னிட்டு அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் அமையவிருக்கும் திடலில் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் கே.எம்.ராஜு, தஞ்சை பந்தல் சிவா, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பரமேஷ்குமார், ரவிக்குமார், போஜன், இளங்கோவன், நாசர் அலி, நந்தி ரவி, ஜார்ஜ், செல்வம், காளிதாசன் ஆகியோர் இணைந்து விழா மேடை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில் இமயம் சசிகுமார் எல்கில் ரவி, ராஜா தம்பி இஸ்மாயில், ஸ்ரீஜேஷ், ஜெகதீஸ்வரன், கார்டன் கிருஷ்ணன், விஷ்ணு பிரபு, தேவா,கமலக்கண்ணன், கண்ணன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி, உளுந்தூர்பேட்டை சிறுபாக்கம் ஊராட்சியில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் யு.எஸ்.வைத்தியநாதன் தலைமையில், ச.பாண்டியன் வரவேற்புரையில், மாவட்ட செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ, கம்பம் செல்வேந்திரன், ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ, எஸ்.யமுனா, இரா.ஸ்ரீதரன், ப.அப்துல் மாலிக், எஸ்.அருண்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்கள், இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. இளைஞர் அணி

## சென்னை கிழக்கு மற்றும் மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் நியமனம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் டி.லோகேஷ் மற்றும் மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.அழகுபாண்டி ஆகியோர் அந்தப் பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டு,

சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளராக **வழக்கறிஞர் 'வானவில்' விஜய்,** 19/20, ஏ–பிளாக், லேண்ட் மார்வல் பிளாட்ஸ், சந்நிதி தெரு, வில்லிவாக்கம், சென்னை–49,

மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளராக **எம்.இளங்கோ,** சி.வி.எஸ்.அவென்யூ, ஒத்தப்பட்டி, கருப்பாயூரணி, மதுரை–20 ஆகியோர் அப்பொறுப்புகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை,
சென்னை-18
நாள் : 22-03-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# பொது இடங்களில் உள்ள கழகக் கொடிக்கம்பங்களை அகற்றிடுவீர்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், மார்ச் 24-

தி.மு.கழகத்தின் அறிவிப்பிற்கிணங்க, பெரம்பலூர் மாவட்டத்திற்குட்ப்பட்ட பகுதிகளில், பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள கழகக் கொடிக்கம்பங்களை உடனடியாக அகற்றிட வேண்டும் என்று கழகத்தினருக்கு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு,



தி.மு.கழகத்தின் அறிவிப்பிற்கிணங்க, தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கழகக் கொடிக்கம்பங்களை, சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை அளித்த தீர்ப்பினை ஏற்று பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய,நகர, பேரூர், வார்டு மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் தங்களது பகுதிகளில் உள்ள தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சித் துறைக்கு சொந்தமான இடங்களிலும்,பொது இடங்களிலும் வைத்துள்ள கழகக் கொடிக்கம்பங்களை உடனடியாக அகற்றிட வேண்டும் எனவும் அவ்வாறு அகற்றப்பட்ட

கொடிக்கம்பளின் விவரங்களை மாவட்டக் கழகத்திற்கு தெரியப்படுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# காஞ்சிபுரத்தில் முதல்வர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

காஞ்சிபுரம், மார்ச் 24-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய கழக செயலாளர் ஜி.தம்பு தலைமையில் எலப்பாக்கம் கிராமத்தில் முதலமைச்சரின் பிறந்த நாள் விழா மற்றும் இந்தி திணிப்புக்கு எதிரான பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளரும், எம்.எல்.ஏ.மான க. சுந்தர், தலைமை கழக பேச்சாளர் குடியாத்தம் பெரிய கோடீஸ்வரன், நாராயணன், கலியுக கண்ணதாசன், மோ.கோ.மணி, சி.இளங்கோ, கே.வேணு, த.பத்மா உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம் என உறுதி மொழியும் ஏற்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் காளிதாஸ், வெங்கடேசன், சுகன்யா, சிவபெருமான், பிரேம்ராஜ், தேவ்,ராஜகோபால், வேதாச்சலம், நிர்மலாத சரதன், சரத் குமார், சித்ரா, இந்துமதி, ஊராட்சி மன்ற தலைவர் ஆதிலட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஒன்றியத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சமுதாய வளைகாப்பு விழா, ஒன்றிய குழு பெருந்தலைவர், கிழக்கு ஒன்றிய கழக செயலாளர், சத்தியமூர்த்தி. தலைமையில் நடைப்பெற்றது. இந்நிகழ்வில் சின்னசேலம் அட்மா குழு தலைவர், தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கனகராஜ் முன்னிலை வகித்தார். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் அகிலா அனைவரையும் வரவேற்றார். இதில் கர்ப்பிணி தாய்மார்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய மோடி அரசை கண்டித்து நாகையில் நாகை, கீழ்வேளூர், வேதாரண்யம் தொகுதியில் நடைபெறும் கண்டன பொது கூட்ட விளக்க துண்டு பிரகரத்தை நாகை கடைத் தெருவில் நாகை மாவட்டக் கழகச் செயலாரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் பொதுமக்களிடம் வழங்கினார். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.அசோக், எஸ்.டேனியல்சத்தியா, ஜி.தாமோதரன், தி.கலையரசன், கே.சுரேஷ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ்.பால்ராஜ் நாகை நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்தியன் மற்றும் பலர் உள்ளனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர், கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி., கழக மாணவர் அணி செயலாளர் இரா.ராஜீவ் காந்தி, தஞ்சை. ஜோ.வியானி விஷ்வா ஆகியோர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் ராணா ஆனந்த் செ.பூபதி அ.சிவக்குமார், மேயர் து.கலாநிதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.